**கவனிக்க.**-2024.07.12 ஆந் திகதிய இல. 2393 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II ( தமிழ் மொழிமூலம் ) மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2394 - 2024 ජූලි මස 19 වැනි සිකුරාදා - 2024.07.19

2394 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1651 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 1652 |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1648 | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, ஓகத்து மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, யூலை மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1647 - B 082590 - 5,403 (2024/07)

# ஆய விற்பனையும் குத்தகையும்

## 2024 ஆம் ஆண்டுக்கான மல்லவபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவின் கள்ளுத் தவறணைக்கான குத்தகை விற்பனை

*2025, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2025, திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலத்திற்குள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படும் கள்ளுத்தவறணைகளில் நொதித்த கள்ளு சில்லறைக்கு விற்பனை செய்வதற்கு முழுமையான சலுகைகளுடன் வாங்குவதற்காக 1982, ஒகத்து 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் இலக்கம் 207 ஐக் கொண்ட வர்த்தமானியில் சுங்கவரி ஆணையாளரினால் பிரசுரிக்கப்பட்ட கள்ளு விற்பனை செய்வதற்கான நிபந்தனைகளுக்கு உட்பட்டு 2024.08.28 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரையில் மல்லவபிட்டிய பிரதேச செயலாளரினால் விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. கள்ளுத்தவறணையை வாடகைக்கு வாங்குவதற்கு முன்வருபவர்கள் குறித்த விலைமனு மாதிரிப் படிவத்தை உரியவாறு பூர்த்தி செய்து கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணைக்கு குறித்துரைக்கப்பட்ட விலைமனு வைப்புத் தொகையைச் செலுத்தி ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் காசாளர் கிளையில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும், மேலே காட்டப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் கள்ளு விற்பனை நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பெற்றுக் கொண்ட பெறுமதி சான்றிதழுடன் உறையில் இட்டு அதற்கு முத்திரை இட்டு,அவ்வுறையில் இடது மூலையில் தான் விலைமனு கோருகின்ற கள்ளுத் தவறணையின் பெயர் மற்றும் இலக்கத்தைத் தெளிவாக எழுதி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள இறுதி நேரத்திற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது இப் பிரதேச செயலகத்தில் இதற்காக வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடுவதன் மூலம் மல்லவபிட்டிய பிரதேச செயலாளருக்கு கிடைக்குமாறு செய்ய முடியும். குறித்த மாதிரிப்படிவத்தை ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.*

*3. விலைமனுதாரர்களினால் விலைமனுப் பத்திரத்தைப் பூர்த்தி செய்யும்போது விலைமனுப் பத்திரத்திரங்களில் செய்யப்படுகின்ற அனைத்து மாற்றங்களுக்கும் விலைமனுதாரரின் முழுமையான கையொப்பத்தையிட்டு உறுதிப்படுத்த வேண்டும்.*

*4.விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியான 2024, ஓகத்து மாதம் 28 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு அனைத்து கேள்விதாரர்களும் இப் பிரதேச செயலகத்திற்கு வருகை தர வேண்டும்.*

*5.எவ்வித காரணங்களும் அறிவிக்காமல் விலைமனுப் பத்திரங்கள் அல்லது விலைமனு பத்திரம் அனைத்தையும் நிராகரிக்கும் உரிமை மல்லவபிட்டிய பிரதேச செயலாளருக்கு உரித்தானதாகும்.*

*6. தனிச்சலுகையுடன் வாங்கிய நபர் என்று அறிக்கைப்படுத்திய பின் வெற்றிகரமான விலைமனுதாரர்களினால் அவ்வாறு அறிவிக்கப்படும் திகதி பி.ப. 2.00 மணிக்கு பிரதேச செயலாளரினால் குறிப்பிடப்படும் தொகையினை பாதுகாப்பு பிணையினை செலுத்தி விற்பனை நிபந்தனைகளுக்கு கையொப்பமிட வேண்டும்.*

*7.கள்ளுத்தவறணைகளை கொண்டு நடாத்துவதற்காக விலைமனுதாரர்களினால் பொதுமக்களின் எதிர்ப்பு ஏற்படாத தகுந்த இடம் ஒன்றினை தேர்ந்தெடுத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் உடற்தகுதி சம்பந்தமாக விலைமனு வழங்கப்பட்ட திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் வெற்றிகரமான விலைமனுதாரரினால் அதுபற்றி பிரதேச செயலாளரின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.*

*8. 2024, ஓகத்து 28 ஆந் திகதி கள்ளு விற்பனையில் திருப்திகரமான கோரிக்கை இல்லாவிட்டால் 2024.09.25 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மீண்டும் கள்ளு விற்பனை இவ்விடத்தில் கொண்டு நடாத்தப்படும்.*

*9. மேலதிக தகவல் தேவைப்படின் இப்பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.*

*டபிள்யூ. பி.சி. என். பத்திரண,*
*பிரதேச செயலாளர்,*
*மல்லவபிட்டிய.*

*2024, யூலை 03 .*

**அட்டவணை**

**மல்லவபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணைக்கான விலைமனுக்கோரல்- 2024**

| பெயர் மற்றும் இலக்கம் | பத்துவ | கள்ளுத் தவறணை திறக்க வேண்டிய பிரதேசம் | விலைமனு வைப்புப் பணம் | விலைமனு மூடப்படும் திகதி மற்றும் நேரம் | கள்ளுத் தவறணை திறக்க வேண்டிய நேரம் | கள்ளுத் தவறணை மூடப்பட வேண்டிய நேரம் |
|---|---|---|---|---|---|---|
| கடுபிடிய இலக்கம் 01 | வேவுட வில்லி ஹத்பத்துவ | கடுபிடிய | ரூபா 1000 | 2024.08.28 மு.ப.10.30 | மு.ப.10.00 | பி.ப.9.00 |

07-568

---

**இரத்தினபுரி மாவட்டத்தின் கள்ளுத்தவறணை ஏல விற்பனை - 2025**

பலாங்கொடை இல. 01 கள்ளுத்தவறணை

1. 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து 2025, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள கால எல்லைக்குள் கீழ் அட்டவணையில் காணப்படும் பிரதேசத்தில் கள்ளு சில்லறைக்கு விற்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இங்கு கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்-

(i) 1982.08.20 ஆந் திகதியுடைய 207 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணை ஏலவிற்பனை நிபந்தனைகளின்படியும்,

(ii) மதுவரிச் சட்ட நிபந்தனையில் காணப்பட்டுள்ள எல்லா மதுபான விற்பனை உத்தரவுப்பத்திரம் சம்பந்தமாக பொது நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகவும்.

2. எல்லா விலை மனுக்களையும் பிரதேச செயலகத்தில் அல்லது இலங்கை வங்கியின் அல்லது பிரதேச செயலகம் பலாங்கொடை எனும் கணக்கில் பணம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டினை பெற்று 1,500.00 ரூபாவினை செலுத்தி பலாங்கொடை இல.01 கள்ளுத்தவறணை எனக் குறிப்பிட்டு பற்றுச் சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

3. இலங்கையில் உள்ள எல்லா பிரதேச செயலகங்களிலும் அல்லது மதுவரித் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட படிவத்தில் விலைமனு உறையை ஒட்டி முத்திரையிட்டு, அதன் இடதுபக்க மேல் மூலையில் "பலாங்கொடை இல. 01 கள்ளுத் தவறணைக்கான விலைமனு" என்று தெளிவாகக் குறிப்பிட்டு விலைமனுத் திகதி முடிவடைய முன்பு பலாங்கொடை பிரதேச செயலகத்தின் விலைமனுப்பெட்டியில் அல்லது பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், பலாங்கொடை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் குறிப்பிட்ட காலத்திற்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

4. எல்லா விலைமனுக்காரர்களும் தமது சொந்தப் பெயரிலேயே விலைமனுவை சமர்ப்பிக்க வேண்டும்.

5. ஒருவருக்கு ஒரு கள்ளுத்தவறணைக்கு மேல் விலைமனு கோர முடியாது, அதே வேளை இருவர் சேர்ந்தும் கள்ளுத்தவறணைக்கு விலைமனு கோர முடியாது.

6. விலைமனுக்காரரால் குறிப்பிட்ட விலைமனுவின் தொகை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடப்பட வேண்டும். விலைமனுக்காரர்

எல்லா விலைமனுக்களிலும் கையொப்பம் திகதியும் இடப்பட்டு உறுதிப்படுத்தல் வேண்டும். எல்லா விலைமனுக்களும் சாட்சியாளர் இருவரினால் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். நிபந்தனைகளுக்குட்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

7. விலைமனுக்கோரலில் வெற்றிபெற்ற விலைமனுதாரர் விலைமனுவை வாங்கியவராகக் கருதப்பட்டு பிரசுரிக்கப்பட்ட பின் பலாங்கொடை பிரதேச செயலகத்தின் நிபந்தனைகளில் கையொப்பமிட்டு பிரதேச செயலாளரால் குறிப்பிடப்படும் பணத்தினை செயலகத்தில் வைப்பிலிட்டு கள்ளுத்தவறணையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

8. 2024.09.12 ஆந் திகதி மு.ப. 10.30 மணிவரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனு கோரப்பட்டு முடிவடைந்ததும் விலை மனுபெட்டி திறக்கப்படும். அச்சமயம் எல்லா விலைமனுதாரர்களும் குறிப்பிட்ட நேரத்தில் பலாங்கொடை பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

9. 2024.09.12 அன்று குறிப்பிட்ட நேரத்தில் இந்த விலை மனு பெறாவிட்டால் அது மீண்டும் 2024.10.10 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

10. எந்தவொரு விபரமும் காட்டாது விலை மனுவை சொந்த விருப்பின் பேரிலும் நிராகரிக்கும் உரிமை பிரதேச செயலாளருக்கு அளிக்கப்படும்.

11. 2024 ஆம் ஆண்டிற்கான தவறணை நடாத்தும் இடத்தில் இடத்தைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்பதனைக் கூற முடியாது. திறமையான விண்ணப்பகாரரால் குறிப்பிடப்பட்ட பிரதேசத்தின் கட்டிடமொன்றை தேடிக்கொள்ள வேண்டும். அந்த கட்டடத்திற்காக மதுபான ஆணையாளர் அவர்களின் அனுமதியைப் பெற வேண்டும். கட்டிடத்தைக் பெற்றுக் கொடுக்க ஆணையாளர் உடன் பாடில்லை என்பதை கவனத்தில் கொள்ளவும்.

12. மாதாந்தக் கட்டணம் செலுத்திய பின் செலுத்தியதற்கான முத்திரை இடப்பட்டால் மட்டும் அனுமதிப்பத்திரத்தை குறித்த மாதத்திற்கு அனுமதிக்கப்படுவதோடு இல்லையெனில் அனுமதிப் பத்திரம் நிராகரிகப்பட்டதாக கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

13. மேலதிக விபரங்களுக்கு பலாங்கொடை பிரதேச செயலகத்தில் கேட்டறிந்து கொள்ளலாம்.

லக்ஷிகா மிகெல்ஆரச்சி,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
பலாங்கொடை,
2024, யூன் 26.

### அட்டவணை

| கள்ளுத்தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | அமைவிடம் | கள்ளுத் தவறணை திறக்கப்பட வேண்டிய நேரம் | விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| இல.01 பலாங்கொடை | பலாங்கொடை நகர எல்லை | பலாங்கொடை நகரசபைக்கு உட்பட்ட பிரதேசம் | மு. ப. 10.00 மணியிலிருந்து பி. ப. 02.00 மணி வரை<br>பி. ப. 05.00 மணியிலிருந்து பி. ப. 09.00 மணிவரை | 2024.09.12 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை |

07-569

# உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்

## *2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 286(1) ஆம் பிரிவின் கீழான மாம் பிஸ்கட்ஸ் லங்கா ( பிரைவேட்) லிமிட்டட் எனும் கம்பனியின் தற்காலிக கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்*

### *( 1939 ஆம் ஆண்டின் கம்பனி நியமம் இல. 20 (1) இற்கு அமைவாக) கம்பனியின் பதிவு இல.* PV *95313*

*கம்பனியின் பெயர்:* மாம் பிஸ்கட்ஸ் லங்கா (பிரைவேட்) லிமிட்டட்
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:* இல.07, வரகந்த எஸ்டேட், வறகமுற, மாத்தளை
*நீதிமன்றம்:* வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
*வழக்கு இல.:* CHC/ 14/2024/CO
*தற்காலிக கம்பனி கலைப்பாளர் பெயர்:* G. J. David
provisional Liquidator
*முகவரி:* C/o, SJMS Associates (Presently Deloitte Associates)
Lavel 3, No.11, Castle Lane, Colombo 4.
*நியமனத் திகதி:* *2024.04.24*

*07- 598*

---

### ஒன்றிணைப்புப் பற்றிய அறிவித்தல்

## *2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242 (3) (b) பிரிவுக்கு அமைவாக டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி மற்றும் பார்த்தி எயார்டெல் லங்கா ( பிரைவேட்) லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் ஒன்றிணைப்பு*

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(1) ஆம் பிரிவுக்கு ஏற்ப ஒன்றிணைப்பிற்கான தீர்மானம் ஒன்றை டயலொக் ஆசி ஆட்டா பிஎல்சி மற்றும் பார்த்தி எயார்டெல் லங்கா ( பிரைவேட்) லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகள் மேற்கொண்டுள்ளன என்பதோடு, அதன் மூலம் டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி மற்றும் பார்த்தி எயார்டெல் லங்கா ( பிரைவேட்) லிமிடெட் என்பன ஒரு தனி நிறுவனமாக ஒன்றிணைக்கப்படுவதோடு, அவ்வாறு ஒன்றிணைக்கப்படும் நிறுவனம் டயலொக் ஆசி ஆட்டா பிஎல்சி ஆகும்.*

*மேற்சொல்லப்பட்ட ஒன்றிணைப்பானது 2024, ஓகத்து 30 ஆந் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*டயலொக் ஆசி ஆட்டா பிஎல்சி*
*(கம்பனி பதிவிலக்கம்* PQ *38),*
*பார்த்தி எயார்டெல் லங்கா*
*( பிரைவேட்) லிமிடெட்*
*( கம்பனி பதிவிலக்கம்* PV *10652).*

*07- 604*

---

### அறிவித்தல்

## *2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கம் கொண்ட கம்பனிகள் சட்டத்தின் 241(4) (b) பிரிவின் கீழான அறிவித்தல்*

## *ஃபன்டேசியா நரோ ஃபப்ரிக்ஸ் ( பிரைவட்) லிமிட்டட் மற்றும் ஸ்டிரெச்லயின் ( பிரைவட்) லிமிடட் என்ற கம்பனிகளின் ஒன்றிணைத்தல்*

*ஃபன்டேசியா நரோஃபப்ரிக்ஸ் ( பிரைவட்) லிமிட்டட் ( கம்பனி பதிவிலக்கம் PV 00207330) மற்றும் ஸ்டிரெச்லயின் (பிரைவட்) லிமிடட் ( கம்பனி பதிவிலக்கம் PV 2777) என்ற கம்பனிகளின் பணிப்பாளர் சபையினால் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம்*

இலக்கம் கொண்ட கம்பனிகள் சட்டத்தின் 239 ஆவது பிரிவின் படி ஃபன்டேசியா நரோஃபப்ரிக்ஸ் ( பிரைவட்) லிமிட்டட் மற்றும் ஸ்டிரெச்லயின் (பிரைவட்) லிமிடட் என்ற கம்பனிகள் ஒறு நிறுவனமாக ஒன்றிணைக்கப்பட்டு எதிர்காலத்தில் ஸ்டிரெச்லயின் ( பிரைவட்) லிமிடட் என தொடர்ந்து இயங்கவுள்ளதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஃபன்டேசியா நரோஃபப்ரிக்ஸ் ( பிரைவட்) லிமிட்டட் மற்றும் ஸ்டிரெச்லயின் (பிரைவட்) லிமிடட் என்ற கம்பனிகளின் இயக்குநர் சபைகளினால் இணைக்கப்படும் கம்பனிகளின் முன்மொழிவுகளின் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரதிகள், பங்குதாரர்களின் அல்லது கடனாளர்களின் பரீட்சிப்புக்காக ஒன்றிணைக்கப்படும் கம்பனிகளான ஃபன்டேசியா நரோஃபப்ரிக்ஸ் ( பிரைவட்) லிமிட்டட் மற்றும் ஸ்டிரெச்லயின் (பிரைவட்) லிமிடட் என்ற கம்பனிகளின் பதிவு செய்யப்பட்ட அலுவலகங்களான இல. 07, போஸ்ட் மாஸ்டரின் இடம், டெம்பிளர்ஸ் சாலைக்கு அப்புறம், கல்கிஸ்ஸையில் மற்றும் பகுதி 89, பியகம ஏற்றுமதி செயலாக்க வலயம், வல்கம மல்பானையிலும் முறையே சாதாரண வணிக நேரங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதுடன் ஒன்றிணைக்கப்படும் கம்பனிகளின் பங்குதாரர் அல்லது கடன் வழங்குநர் அல்லது ஒன்றிணைக்கப்படும் கம்பனிகளிடம் இருந்து கடப்பாடொன்றை உடையவரும் ஒன்றிணைக்கப்படும் கம்பனிகளிடம் கேட்கும் பட்சத்தில் ஒன்றிணைக்கப்பட்ட யோசனையின் பிரதியொன்றை எந்தவித கொடுப்பனவுமில்லாது விநியோகிப்பதற்கு கடமைப்பட்டுள்ளோம்.

இவ் ஒன்றிணைப்பானது கம்பனிகள் பதிவாளர் தலைமை அதிபதி அவர்களால் கம்பனிகளின் சட்டத்தின் 244 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படும் ஒன்றிணைத்தல் சான்றிதழ் வழங்கப்பட்ட திகதியிலிருந்து அமுல்படுத்தப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

கோபரேட் சேர்விசஸ் ( பிரைவட்) லிமிடட்,
கம்பனிச் செயலாளர்கள்,
ஸ்டிரெச்லயின் (பிரைவட்) லிமிடட் மற்றும் ஃபன்டேசியா
நரோஃபப்ரிக்ஸ் ( பிரைவட்) லிமிட்டட்.

இல. 216, தி சேரம் பிளேஸ், கொழும்பு 10.

07- 648

---

# அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

**வெளிநாட்டு மதுபான விற்பனை அனுமதிப்பத்திரம் தொடர்பான விண்ணப்பம்**
**கண்டி மாவட்டத்தில் தெல்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் வெளிநாட்டு மதுபான தவறணை**
**2024/2025 ஆம் வருடங்களுக்கான குத்தகை விற்பனை**

1982, ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1983 ஆம் ஆண்டு மற்றும் இதன் பிற்காலம் தொடர்பான வெளிநாட்டு மதுபான விற்பனை சட்ட திட்டங்களுக்கு அமையவும் இக்காலத்தில் செல்லுபடியாகும் அனைத்து வருமான வரி அத்தாட்சிப்பத்திரங்களுக்கும் செல்லு படியாகும் போது விற்பனைவரி சட்டதிட்டங்களுக்கு அமையவும் மதுபானம் சில்லறையாக விற்பதற்கான வரப்பிரசாதமொன்றை விலைக்கு வாங்குவதற்கான தெல்தோட்டை பிரதேச செயலாளர் மேலதிக அரசாங்க அதிபரான என்னால் 2024.08.15 ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரைக்கும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ள முடியுமான பொதுவான விண்ணப்பப்படிவத்தில் தயார் செய்யப்பட வேண்டியதுடன்,

அ. கேள்வி வைப்புப்பணம் என்ற வகையில் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பின்வரும் துணைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் திட்டமான கேள்விவைப்புப் பணத்தொகையை வைப்பில் இட்டு அதற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச் சீட்டையும்,

ஆ. கேள்விதாரர்களின் சொத்துக்கள் அவை அமைந்துள்ள பிரதேசத்தில் பிரதேச செயலாளரிடத்தில் பெற்றுக்கொண்ட சொத்துக்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றை முன்வைத்தல் வேண்டும்.

3. கேள்வி மற்றும் சொத்துக்கள் உறுதிப்பத்திரம் முன்வைப்பது தொடர்பாக குறிப்பிட்ட வெளிநாட்டு மதுபான தவறணை குத்தகைக்கு விற்றல் சட்டதிட்டங்களில் அடங்கும் சட்டங்கள் ஒழுங்கு முறையாக பின்பற்றப்படல் வேண்டும் என்று கேள்வி

முன்வைப்போரிடத்தில் மிகக் கடுமையாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கேள்விப்பத்திரம் பூரணப்படுத்துவதில் கேள்விதாரர் பின்வரும் தேவைகள் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும்.

1. கேள்விப்பத்திரத்தை முழுமையாகப் பூரணப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யும் போது அங்கு குறிப்பிடப்பட்டுள்ள பணத்தை இலக்கத்தில் மட்டுமன்றி எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

2. பூரணப்படுத்தப்பட்டுள்ள கேள்வி விண்ணப்பத்தில் சாட்சியாளர்களின் கையெழுத்து இடப்பட்டிருக்க வேண்டும்.

3. மாற்றங்கள் செய்யும் அனைத்து இடங்களிலும் சொற்கள் திருத்துவதிலும் கேள்விதாரர்களின் சுருக்கக் கையொப்பமும் திகதியும் இட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அங்கு தேவைகளுக்கு முரணாக முன்வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

4. முறையாக முன்வைக்கப்படுகின்ற கேள்விப்பத்திரம்,

(அ). பிரதேச செயலாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பணம் செலுத்தப்படுகின்ற பற்றுச்சீட்டு;

(ஆ). சொத்து விபரம் தொடர்பான அத்தாட்சி ஆகியவற்றுடன் கடித உறையொன்றில் இட்டு முத்திரையொட்டி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் குறிப்பிட்டு தெல்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

5. குத்தகைக்காக கேள்வி ஏற்றுக்கொள்ளப்படுவது முடிவடையும் நேரம் கீழே குறிப்பிட்டுள்ள 01 ஆவது வாசகத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது. அந்நேரத்தில் அனைத்து கேள்விதாரர்களும் தெல்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

6. திருப்தியான கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விதாரர் சிறப்புரிமைகளை வாங்கியவர்கள் எனப் பிரகடனப்படுத்தப் பட்ட பின் அன்றைய தினம் பி.ப. 2.30 மணிக்கு முன்பு தெல்தோட்டை பிரதேச செயலாளரால் விதிக்கப்படும் பணத்தொகையொன் றினை பிணைப்பணமாக தெல்தோட்டை பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய கள்ளுத்தவறணைகள் நிபந்தனைக் கொத்தில் கையொப்பமிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப்பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுக்காக எனக் குறிப்பிட்ட காசோலையொன்றினால் அல்லது இலங்கை வங்கியினாலோ வழங்கப்பட்ட பாதுகாப்புக்கான காசோலை என அழைக்கப்படும் காசோலை ஒன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

7. கள்ளுத் தவறணைகளினாலோ, வேறு வலுவுடைய அனுமதிப்பத்திரங்களை உடைய மது வியாபார நிலையங்களினாலோ விற்பனைக்காக மொத்தமாக ( பீப்பாய் கணக்கில் ) கள்ளு குடி வகைகள் விநியோகிக்கப்படமாட்டாது.

8. பாதுகாப்பு காரணமாகவோ அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற வேறு ஏதும் காரணங்களினாலோ வெளிநாட்டு மதுபான தவறணை தற்காலிகமாக மூடி விடுவதற்குரிய கட்டளையொன்று பிறப்பிப்பதற்கு எனக்கு ஏற்பட்டால் அவ்வாறு தவறணையை மூடிய காலம் தொடர்பாக குத்தகை தொடர்பாக குத்தகை வாரத்தில் சலுகை ஏற்பாடு ஏதும் செய்யப்படமாட்டாது.

9. முன்னர் வெளிநாட்டு மதுபான சாலையொன்றை நடாத்திச் சென்றது தொடர்பாக அரசாங்கத்திற்கு ஏதும் ரொக்கப்பணம் கொடுக்க வேண்டியிருந்தால் கேள்வியை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் அந்த மிகுதி ரொக்கப்பணத்தை கொடுத்து பூரணப்படுத்தப்பட வேண்டும்.

10. மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தில் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

எச்.கே.எஸ்.தில்ஹானி,
பிரதேச செயலாளர் ( பதில்கடமை),
தெல்தோட்டை.

பிரதேச செயலகம்,
தெல்தோட்டை,
2024, யூலை 03.

### அட்டவணை

### கண்டி மாவட்டத்தில் தெல்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அனுமதி அளிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான தவறணைப் பட்டியல் 2024/2025

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரதேச செயலாளர் பிரிவு | தவறணை அமைக்கப்பட வேண்டிய பிரதேசம் | தவறணை திறக்கப்படும் நேரம் | கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| 18 வெளிநாட்டு மதுபான சாலை | தெல்தோட்டை | தெல்தோட்டை பிரதேச செயலக பிரிவிற்குள் | மு.ப.11.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை<br>பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 8.00 மணி வரை | 2024.08.15ஆந் திகதி மு.ப.10.30 வரை |

வெளிநாட்டு மதுபான தவறணையின் குத்தகை விற்பனைக்காக வைப்புப் பணமாக வைப்பிலிடப்பட வேண்டிய தொகை 1000.00 ரூபா ஆகும்.

07– 579

---

### நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கள்ளுத் தவறணைகள் வெளிநாட்டு குடிவகை தவறணைகள் குத்தகை விற்பனை – 2024-2025

1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பின்னரான காலத்திலும் நடைமுறையில் உள்ளவாறான கள்ளு, வெளிநாட்டு குடிவகை தவறணைகள் உத்தரவுப் பத்திரம் சம்பந்தமாக கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய 2024–2025 ஆம் ஆண்டிற்காக குத்தகைக்குக் கொடுத்தல். இக்காலப்பகுதியில் கள்ளு, வெளிநாட்டு குடி வகைத் தவறணைகள் (தானிய வகைகளைக் கொண்டு இந்நாட்டில் தயாரிக்கப்படும் குடிவகை உட்பட) தனிநபருக்காக சில்லறை விற்பனை குத்தகைக்குக் கொடுப்பதற்கான உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்கான கேள்விகள் 2024.09.06 ஆந் திகதி மு.ப. 10.30 வரை கேள்விப்பத்திரம் நுவரெலியா பிரதேச செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2 . (அ) இத்தீவின் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெறப்படும் குறிப்பிட்ட படிவத்தில் மாத்திரமே கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) அட்டவணையில் குறிப்பிட்ட தொகையை எந்தவொரு பிரதேச செயலாகத்திலாவது செலுத்தி அதன் பற்றுச் சீட்டு இணைக்கப்படல் வேண்டும்.

(இ) பிரதேச செயலாளரால் வழங்கிய கேள்விக்காரரின் அசைவற்ற ஆதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக்கும்போது, கள்ளுத்தவறணைகளினதும், வெளிநாட்டுக்குடிவகை குத்தகைக்கான நிபந்தனைகளுக்குட்பட்ட வாராக கேள்விப்பத்திரதாரர் இருத்தல் வேண்டும்.

(ஈ) கேள்விப்பத்திரம் நிரப்பும் போது கேள்விதாரர் கீழ்க்காணும் முக்கியத்துவங்களைக் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். கேள்வித் தொகையை எழுத்திலும் இலக்கத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

(ii) பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரத்தில் கையொப்பமிடும் சாட்சிகளது ஆளடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிடப்படல் வேண்டும்.

(iii) கேள்விப்பத்திரத்தில் ஏதாவது திருத்தங்கள் , மாற்றங்கள் செய்யப்படின் கேள்விப்பத்திரதாரரின் முழுமையான கையொப்பத்தையும் திகதியையும் இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.

(iv) ஒவ்வொரு கேள்விப்பத்திரதாரர்களும் தமது அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆள் அடையாள அட்டையின் பிரதியை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்படி நிபந்தனைகளுக்குட்படாத பட்சத்தில் கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.

3. முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரம், கேள்விப்பத்திரத்திற்கான வைப்புச் செய்யப்பட்ட பற்றுச்சீட்டு , பெறுமதிச் சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரையிடப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் தவறணைக்கான பெயரையும் தவறணைக்கான இலக்கத்தையும் குறிப்பிட்டு நுவரெலியா பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விகள் சமர்ப்பிக்க வேண்டிய கால எல்லைக்குள் போடப்படல் வேண்டும். தபாலில் கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்புவோர் குறிப்பிட்ட கால எல்லை முடிவதற்குள் பதிவுத் தபால் மூலம் நுவரெலியா பிரதேச செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிக் கால எல்லை கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தருணத்தில் கேள்விதாரர்கள் பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ நிராகரிக்கவோ எனக்கு அதிகாரம் உண்டு.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விதாரர் விற்பனைத் தினத்தன்று பி.ப.2.00 மணிக்கு முன் நுவரெலியா பிரதேச செயலாளரால் தீர்மானிக்கப்பட்ட தொகையை பிணைப் பணமாக நுவரெலியா பிரதேச செயலாளருக்கு செலுத்துதல் வேண்டும். மேற்படி வைப்புப் பணம் நுவரெலியா இலங்கை வங்கியில் ஒரு வருட நிரந்தர சேமிப்புக் கணக்கில் எனது பெயரால் வைப்புச் செய்ய குத்தகையாளர் சம்மதிக்க வேண்டும். மேற்படி பிணைப்பணம் காசாக அல்லது இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கியினால் கொடுக்கப்படும் பாதுகாப்பான காசோலை மூலமாக செலுத்தப்படல் வேண்டும். உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு தேவையான முத்திரைகள் கேள்விப்பத்திரதாரரால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7. நியமிக்கும் தவணைப்பணக் கட்டணம் மாதாந்தம் காசாக செலுத்துபவர் மட்டுமே, கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்கும் தகைமையுடையவராவர்.

8. கேள்விப்பத்திரம் கூட்டாகச் சமர்ப்பிக்கும் பட்சத்தில், ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரி தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

9. மேற்குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத தவறணைகள் 2024.10.04 ஆந் திகதி மு.ப. 10.30 மணியளவில் மீள் விற்பனை செய்யப்படும்.

10. மேற்படி தவறணைகள் குத்தகைக்கு கொடுப்பது சம்பந்தமான முடிவான தீர்மானம் என்னுடையதாகும்.

11. தவறணைகள் குத்தகை பற்றிய மேலதிக விபரங்கள் நுவரெலியா பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

டி.ஏ.பீ.தனன்சூரிய,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

பிரதேச செயலகம்,
நுவரெலியா,
2024, யூலை 14.

**அட்டவணை**

**வெளிநாட்டு மதுபானத் தவறணைகள்**

| தவறணையின் பெயர் | தவறணையை அமைக்க வேண்டிய இடம் | கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி | கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நேரம் | கேள்வி வைப்புப் பணம் ரூபா.ச. |
|---|---|---|---|---|
| இல. 01 நுவரெலியா | மாநகர சபை நுவரெலியா, இல. 6 பிரிவிற்குள் | 2024.09.06 | மு. ப. 10.30 | 5000. 00 |

07- 580